


# “சமூகநீதி என்பது தொடர் பயணம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய 'தி.மு.க 75 அறிவுத் திருவிழா' நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற 'இருவண்ணக் கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தின் ஆறாவது அமர்வுக்குத் தலைமை வகித்து, சென்னை இதழியல் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் அவர்கள் ஆற்றிய உரை :**



**ஏ.எஸ்.பன்னீர்செல்வன்,** தலைமை இயக்குநர் - சென்னை இதழியல் நிறுவனம்.

“கருத்தரங்கத்தின் நேற்றைய அமர்வுகளில் இருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால், தி.மு.க. என்பது ஒற்றைப் பரிமாணம் கொண்ட ஓர் இயக்கம் அல்ல, அது பல தளங்களிலும் தொடர்ந்து செயலாற்றிவருகிறது என்பதுதான். 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' புத்தகத்தை எடுத்துக்கொண்டால்கூட திராவிட முன்னேற்றக்கழகம் பண்பாட்டுத்தளத்தில் இப்படி இயங்கி இருக்கிறது, சமூகத்தளத்தில் இப்படி இயங்கி இருக்கிறது, அரசியல் தளத்தில் இப்படி இயங்கியிருக்கிறது என அனைத்து வகையிலும்



பட்டியலிடுகிறோம். அனைத்து பட்டியலுக்குப் பின்னாலும் இருக்கக்கூடிய முக்கியமான விஷயம் என்னவென்றால், 'சமத்துவம்', 'சமதர்மம்' என்கிற இரண்டே வழிகள்தான்.

## சமத்துவம், சமதர்மம்

நம்முடைய சமூக நீதி என்பதே இந்தச் சமத்துவம் சமதர்மத்தை நோக்கிய ஒரு பார்வைதான். நீங்கள் கொண்டு வரக்கூடிய திட்டத்தில் யார் பயனடையவில்லையோ அவர்களுக்கான திட்டத்தைத் தீட்டுவது என்பது ஒரு வலிமையான பார்வை. இந்தத் திட்டத்தில் இவர்கள் பயனடைந்து விட்டார்கள், அவர்களுக்கு எதற்காக இந்தத் திட்டத்தைத் தொடர வேண்டும் என்பது இன்னொரு பார்வை.

## கிரீமி லேயரும் உள் ஒதுக்கீடும்

உதாரணமாக, கிரீமி லேயர் என்ற விஷயத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்தத் திட்டத்தில் இருந்து சிலரை விலக்க வேண்டும் என்பதுதான் கிரீமி லேயர். ஆனால், திராவிட இயக்கம் கிரீமி லேயரை ஏற்றுக்கொள்வதில்லை. இந்தத் திட்டத்தால் யார் முழுமையாகப் பயனடையவில்லையோ அவர்களை எப்படி இந்தத் திட்டத்துக்குள் கொண்டு வருவது என்று பார்ப்பதுதான் திராவிட இயக்கம். அதனால்தான் இந்த உள் ஒதுக்கீடு என்பதே நடக்கிறது.

## தொடர் பயணம்

ஜெயரஞ்சன், சுபகுணராஜன், ஜோதி சிவஞானம் ஆகியோர் இணைந்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தினுடைய அடிநாதமாக இருக்கக்கூடியது என்னவென்றால் 'சமூக நீதி என்பது வெறும் இட ஒதுக்கீடு அல்ல, அது ஒரு தொடர் பயணம்' என்பதுதான். சமூக நீதிக்கான வேட்கை, சமத்துவம் சமதர்மத்துக்கான வேட்கை தொடர்ந்துகொண்டே இருக்கும். இதில் யாரேனும் ஒருவர் விடுபடுவதற்கான வாய்ப்புகள் தொடர்ந்து நிகழும். அப்படி விடுபடுபவர்களையும் சேர்த்து அவர்களுக்கான உரிமைகளையும் அளிப்பதுதான் நம்முடைய பணி.

இந்த அமர்விலேயே நீங்கள் பார்த்தீர்கள் என்றால், ஒரு மாற்றுத்திறனாளி பேச்சாளர் இருக்கிறார், ஒரு திருநங்கை பேச்சாளர் இருக்கிறார் மற்றும் வெவ்வேறு விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த பேச்சாளர்கள் இருக்கிறார்கள். சமூகநீதி செயல்பாடுகளின்போது சில இடைவெளிகள் இருக்கத்தான் செய்யும். இடைவெளி இல்லாமல் எதையும் செயல்படுத்த முடியாது. ஆனால், அப்படி இடைவெளிகள் உருவாகும்போது, அந்த இடைவெளியை நிரப்புவதற்கான பார்வைதான் நம்முடைய பார்வை.

## கிரீமி லேயர் வேண்டாம்

எல்லோரையும் ஒரு திட்டத்தில் கொண்டுவருவது நம்முடைய பார்வை. சிலரை திட்டங்களில் இருந்து நீக்குவது, கிரீமி லேயரை ஆதரிப்பவர்களின் பார்வை. கிரீமி லேயருக்கும் எஸ்.ஐ.ஆர். (S.I.R) 'வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம்' என்பதற்கும் அதிக வித்தியாசமில்லை.

சமூகநீதிச் செயல்பாடு என்பது ஒரு தொடர் செயல்பாடு. அதனால் சிலர் பலன் அடைந்தவுடன் அவர்களை உடனே அதிலிருந்து விலக்க வேண்டும் என்பதுதான் கிரீமிலேயர். கீழே இருப்பவர்களை மேலே கொண்டு வருகிறோம். மேலே வந்தவர்களை உடனடியாக கிரீமி லேயர் என்று சொல்லி தள்ளி விட்டோம் என்றால், சமூகநீதிக்கு அர்த்தமே கிடையாது. உதாரணத்துக்கு, கல்வி வேண்டும் என்பது உயரிய நோக்கம். பள்ளிக்கூடம் கட்டியதும், 'பள்ளிக்கூடம்தான் வந்துவிட்டதே, இதற்கு மேல் எதற்கு பள்ளிக் கல்விக்கான செலவுகள்?' என்று கேட்டால், கல்வியறிவு பெற்றவர்கள் கல்வியறிவு அற்றவர்களாக மாறிவிடுவார்கள். அந்தப் பணியே விரைவில் சரிய ஆரம்பித்துவிடும். அதனால்தான் இட ஒதுக்கீட்டில் கிரீமி லேயர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக பிற்படுத்தப்பட்டோரில் இஸ்லாமியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு, பட்டியலினத்தில் அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு என்று மாற்றுப்பார்வையை, மாற்றுச் செயல்பாடுகளை முன்வைத்தோம்.

## அறிவுபூர்வமான அணுகுமுறை

நம்முடைய கடும் உழைப்பைப் பற்றி எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்; கடும் தியாகங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்; பெரும் போராட்டங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இவை எல்லாவற்றுக்கும் பின்னால் இருந்தது அறிவுபூர்வமான அணுகுமுறைதான். ஒரு பிரச்சினையை அறிவுபூர்வமாகப் புரிந்துகொண்டு எப்படி இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காண வேண்டும் என்பதுதான்.

சர் பிட்டி தியாகராயர் காலகட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டத்தில் ஆரம்பித்து, இன்றைக்கு வரைக்கும் நாம் பார்த்தோமேயானால் நமக்குத் தெரியக்கூடியது ஒரே ஒரு விஷயம்தான். எடுத்தவுடன் நாம் அகலக்கால் வைத்து விடவில்லை. சிறிது சிறிதாகதான் வளர்கிறோம். அப்படி வளர்கின்றபோது யாராலும் இந்தத் திட்டங்களைப் பின்னோக்கித் திருப்பிவிட முடியவில்லை.

நீதிக்கட்சி ஆட்சியில் மாநகராட்சிப் பள்ளிகளில் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம் இன்றைக்கு பெரிய அளவில் விரிவடைந்து காலை உணவு மற்றும் மதிய உணவு என்கிற அளவுக்கு மாறி இருக்கிறது. ஒவ்வோர் அளவிலும் ஆராய்ச்சி செய்து எவ்வாறு செயல்படுத்த முடியும், விரிவாக்கம் செய்ய முடியும் என்று திட்டமிட்டு வந்து கொண்டேயிருக்கிறது. இதுதான் திராவிட இயக்கத்தின் அறிவுபூர்வமான அணுகுமுறை. ஆகையால், இந்த விழாவுக்கு 'அறிவுத் திருவிழா' என்று பெயர் வைத்திருப்பது மிகவும் பொருத்தமாக உள்ளது.

தி.மு.க. கருத்தரங்கங்களில் இருக்கக்கூடிய கடினமான வேலை, எந்த ஒரு பேச்சாளரையும் சீக்கிரம் முடித்து விடுங்கள் என்று சொல்லிவிட முடியவில்லை. ஏனென்றால், அவர்கள் பேசுவது அனைத்துமே மிகவும் முக்கியமான கருத்துகளாக இருக்கின்றன. என் தலைமையுரையின் இறுதி உரையில் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்,

நான் கலைஞருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியபோது, ஐந்து முறை அவரிடம் பேசினேன். அப்போது அவர் ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் சொன்னார். 'நமக்கு சோறும் சமம், சாதமும் சமம். சாதம் மட்டும் வேண்டும் என்பவர்கள் நமக்கு சாதிய துவேஷம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நாம் சாதம் வேண்டாம் என்றா சொல்கிறோம், சோற்றுக்கும் இடம் கொடு, என்றுதான் கேட்கிறோம். சோற்றுக்கும் இடம் கொடு என்று கேட்பதில், நமக்கு சாதிய துவேஷம் என்று எப்படி பட்டம் கட்ட முடிகின்றது?' என்று அவர் கேட்டார். நம்முடைய பார்வை யாரையும் விலக்கிவைக்கும் பார்வையில்லை. எல்லோரையும் உள்ளடக்கி, அரவணைக்கும் பார்வை”. ●

# அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**'கலப்பை' பதிப்பகத்தை நடத்திவரும் எழுத்தாளர் வே.ராமசாமியின் முகநூல் பதிவு :**

'கலைஞர் இல்லாத 2021 தமிழக சட்டமன்றத் தேர்தல் பரப்புரையின் போது, தொலைக்காட்சியில் செய்திகளைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பேன்.

பரப்புரையின் கடைசி நாள் அன்று சன் டி.வி.யில் எதிர்க்கட்சித் தலைவராக ஸ்டாலின் அவர்கள் அளித்த உணர்ச்சிகரமான நேர்காணலை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தேன்.



கலைஞர் இல்லாத தேர்தல், தி.மு.க. ஆட்சி மலர வேண்டும் என்கிற பதைபதைப்பு மனதில் இருந்தது. அப்போது செய்தியாளர் குணசேகரன் அவர்கள் கலைஞர் பற்றி - மெரினாவில் இடப் போராட்டம் பற்றி, கேள்வி கேட்டதும், மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கணம் கலங்கி, பின்னர் பதில் அளித்தார். அன்று முதல் என் குழந்தைகள் நீநிகா, கவின் வேல்சாமி இருவரும் 'இவரை நாம் நேரில் பார்க்க முடியுமா அப்பா?' என்று என்னிடம் செய்தியில் முதல்வர் வரும்போது எல்லாம் கேள்வி கேட்பது உண்டு. நான் முடியும் என்று சொல்லி வைப்பேன்.



தி.மு.க. இளைஞர் அணி நடத்திய முற்போக்கு புத்தகக் காட்சியில் எங்களுடைய கலப்பை பதிப்பகமும் அரங்கம் அமைத்திருந்தது. வள்ளுவர் கோட்டத்தில் முதல்வர் - துணை முதல்வர் இருவர் ஃபிளெக்ஸ் பேனர்களில் கைகளைப் பிடித்து நீநிகா - கவின் வேல்சாமி இருவரும் படங்கள் எடுத்து வந்தனர். முற்போக்கு புத்தகக் காட்சியின் நிறைவு நாளன்று முதல்வர் அனைத்து அரங்குகளுக்கும் வந்து நூல்கள் சேகரித்தபோது, எங்கள் அரங்கில் நீநிகா-கவின் ஆசை நிறைவேறியது மட்டுமன்றி, முதல்வருடன் உரையாடி மகிழ்ந்தார்கள்.

அறிவுத் திருவிழா மிகப் பயனுள்ள முன்னெடுப்பு. 'கலப்பை' போன்ற முதல் தலைமுறை பதிப்பாளர்களுக்கு கிடைத்த நல் வாய்ப்பு. இதில் பங்கேற்றது, நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் ஒரு சேர அளித்தது.